**பள்ளிக் கல்வி ஆணையர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநரின் இணை செயல்முறைகள், சென்னை-6.**

**ந.க.எண். 34116/ டி1/இ4/2013, நாள்.29.03.2023**

---------

**பொருள்:** பள்ளிக்கல்வித்துறை – அரசு உதவி பெறும் தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் அனைத்து வகை தலைமை ஆசிரியர்கள் மற்றும் முதுகலை ஆசிரியர் பணியிடங்கள்-நியமன ஒப்புதல் வழங்குதல் – தெளிவுரை அளித்தல்–சார்பு.

**பார்வை:**

1. அரசாணை (நிலை) எண்.*165*, பள்ளிக்கல்வி (தொ.க.2(1)த்துறை, நாள் 17.09.2019
2. சென்னை உயர்நீதிமன்ற மேல்முறையீட்டு வழக்கு எண். WA.(MD).No. 76/2019, etc., batch cases நீதிமன்ற தீர்ப்பு நாள் 31.03.2021.
3. The Remarks filed by the Directorate in the Apex court on the above judgments.
4. உச்சநீதிமன்ற Special Leave to Appeal (C) No.15702/2021 -ல் 14.03.2022 நாளிட்ட இடைக்காலத் தீர்ப்பாணை
5. சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண். W.P.NO.3194/2020, இதர தொகுப்பு வழக்குகளில் தீர்ப்பு நாள் 18.04.2022
6. சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளை வழக்கு எண் W.P.(MD)NOs.6340/2018, நீதிமன்ற தீர்ப்பு நாள் 02.09.2022
7. தமிழ்நாடு அரசிதழ் எண்.22 ,நாள்.13.01.2023-ல் வெளியிடப்பட்ட தமிழ்நாடு தனியார் பள்ளிகள் (வரன்முறைப்படுத்துதல்) விதிகள், 2023

பார்வை (2)ல் காணும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் 31.03.2021 நாளிட்ட தீர்ப்பாணையின்படி ஆசிரியர்-மாணவர் விகிதாசாரத்தின்படி ஆசிரியர் பணியிடங்கள் நிர்ணயம் செய்தல், பணி நிரவல் மேற்கொள்ளுதல் சார்ந்த வழிகாட்டுதல்களை நீதிமன்றம் வழங்கியிருந்தது.

பார்வை (3) ன்படி உச்சநீதிமன்றத்தில் மேற்காணும் நீதிமன்ற வழக்கு சார்ந்து தாக்கல் செய்யப்பட்ட வாதவுரையில் ஒவ்வொரு வழிகாட்டுதலுக்கும், பள்ளிக்கல்வித்துறை ஏற்றுக்கொண்டதா, இல்லையா என்ற விளக்கம் அளிக்கப்பட்டது. WA.(MD).No. 76/2019, தொகுப்பு வழக்குகளில் 31.03.2021 நாளிட்ட தீர்ப்பாணையின் வழிகாட்டுதல்களில் பத்தி 95 (f)-ல் (i)க்கு மட்டும் பார்வை(4)ன்படி உச்சநீதிமன்றம் 14.03.2022ல் தடையாணை விதித்து ஆணை வழங்கியுள்ளது,

பார்வை (5)ல் கண்ட 18.04.2022 நாளிட்ட தீர்ப்பின்படி, கீழ்க்காணும் அறிவுரைகளை நீதிமன்றம் வழங்கியுள்ளது.

"10. Having regard to the rival submissions of the parties, taking note of the judgment passed by the Division Bench of this Court in a Batch of Writ Appeals in W.A.(MD) No.76 of 2019, etc., G.O.Ms.No.165 issued by the School Education department, dated 17.9.2019 will not prohibit the educational authorities to approve the appointment made by the School Management in the instant writ petitions since the proposals for approval of appointment made by the School Management were forwarded to the educational authorities prior to the issuance of G.O.Ms.No.165 dated 17.9.2019. Therefore, this Court is of the view that the respondent department without considering the G.O.Ms.No.165 dated 17.9.2019 in proper perspective and passed the impugned order rejecting the proposals submitted by the School Management. Therefore, the impugned orders passed by the respondent department are liable to be quashed.

11. Accordingly, the impugned orders passed by the respondent department in the aforesaid writ petitions are quashed and remitted to the Chief Educational Officers/District Educational Officers concerned, to consider and pass an order of approval of the appointment made by the School management, provided the said proposals satisfies all the norms prescribed for such appointments and as per the Rules, as expeditiously as possible preferably within a period of 12 weeks from the date of receipt of copy of the order. It is 9/11 https://www.mhc.tn.gov.in/judis W.P.No.3194 of 2020, etc. Batch made clear that those who are appointed to the post of B.T. Assistant and Secondary Grade Teacher prior to the issuance of G.O.Ms.No.165 dated 17.9.2019 and also, the proposals for approval of the such appointments were forwarded to the educational authorities prior to the issuance of G.O.Ms.No.165 dated 17.9.2019 alone are entitled to the relief granted hereinabove."

பார்வை (8)ல் கண்ட அரசிதழ் எண்.22 நாள் 13.01.2023 -ன்படி தனியார் பள்ளிகளுக்கான விதிகள், 2023 அரசால் வெளியிடப்பட்டுள்ளது. எனவே, அரசு உதவிபெறும் பள்ளிகளில் அனைத்து வகை தலைமை ஆசிரியர்கள் மற்றும் முதுகலை ஆசிரியர்கள் பணியிடங்கள் ஒப்புதல் அளிப்பது, பணிநிரவல் சார்ந்து கீழ்க்காணும் அறிவுரைகள் வழங்கப்படுகின்றது.

| வ. எ. | பணியிடத்தின் வகை | வழிகாட்டுதல்கள் | கல்வித் தகுதி மற்றும் நியமன முறை சார்ந்த விதிகள் |
|---|---|---|---|
| 1 | தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளின் தலைமை ஆசிரியர் பணியிடங்களின் நியமன ஒப்புதல் (Single management/ Corporate management) | 1) தலைமை ஆசிரியர் பணியிடத்திற்கு ஊட்டுப் பதவிகளில் தகுதி பெற்றவர்கள் இருப்பின் முதற்கண் அவர்களுக்கு பதவி உயர்வு அளிக்கப்பட வேண்டும்.<br>2) அனைத்து வகை தலைமை ஆசிரியர்கள் பதவி உயர்வுக்கு நியமன ஒப்புதல் வழங்கலாம். | தமிழ்நாடு தனியார் பள்ளிகள் (வரன்முறைப் படுத்துதல்) சட்டம், 2018 மற்றும் விதிகள், 2023 |

| | | | |
|---|---|---|---|
| | | 3) பதவி உயர்வுக்கு தகுதி வாய்ந்தவர்கள் இல்லை எனில், தலைமை ஆசிரியர் நேரடி நியமனம், கல்வித்தகுதி, பணி அனுபவம் TAMIL NADU PRIVATE SCHOOLS (REGULATION)RULES, 2023, rule 28(4)(b) –ன்படி மேற்கொள்ளப் பட்டிருப்பின் ஒப்புதல் வழங்கலாம். | |
| 2 | அ)அரசு நிதியுதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளில் முதுகலை ஆசிரியர் பணியிடங்களின் நியமன ஒப்புதல்<br>(Single management) | 1)தற்போதைய பணியாளர் நிர்ணய ஆணையின்படி அனுமதிக்கப்பட்ட மற்றும் தகுதிவாய்ந்த பணியிடமாக இருக்க வேண்டும்.<br>2) அப்பணியிடத்திற்கு ஊட்டுப்பதவிகளில் TAMIL NADU PRIVATE SCHOOLS (REGULATION)RULES, 2023, rule 28(4)(b)-ன்படி முதுகலை ஆசிரியர் பதவிக்கான கல்வித்தகுதி பெற்றவர்கள் இருப்பின் முதற்கண் அவர்களுக்கு பதவி உயர்வு அளிக்கப்பட வேண்டும்.<br>3) பதவி உயர்வுக்கு தகுதி பெற்றவர்கள் இல்லை எனில் நேரடி நியமனத்திற்கு ஒப்புதல் அளிக்கலாம் | தமிழ்நாடு தனியார் பள்ளிகள் (வரன்முறைப் படுத்துதல்) சட்டம், 2018 மற்றும் விதிகள், 2023 |
| | ஆ)அரசு நிதியுதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளில் முதுகலை ஆசிரியர் பணியிடங்களின் நியமன ஒப்புதல்<br>(Corporate management) | கூட்டு மேலாண்மைப் பள்ளிகளில் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட பள்ளியில் முதுகலை ஆசிரியர் காலிப் பணியிடம் ஏற்படும்போது, அக்காலிப் பணியிடத்திற்கு நியமன ஒப்புதல் வழங்கும்போது கீழ்க்காணும் நடைமுறை பின்பற்றப்பட வேண்டும்.<br>1) தற்போதைய பணியாளர் நிர்ணய ஆணையின்படி அனுமதிக்கப்பட்ட மற்றும் தகுதிவாய்ந்த பணியிடமாக இருக்க வேண்டும். | தமிழ்நாடு தனியார் பள்ளிகள் (வரன்முறைப் படுத்துதல்) சட்டம், 2018 மற்றும் விதிகள், 2023 |

| | | | |
|---|---|---|---|
| | | 2)அக்கூட்டு மேலாண்மையின் கீழ் செயல்படும் அரசு நிதியுதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளுக்குள் அதே பாடத்தில் உபரி முதுகலை ஆசிரியர்கள் பணியிடம் ஏதும் இருத்தல் கூடாது.<br>3)அக்கூட்டு மேலாண்மையின் கீழ் செயல்படும் அரசு நிதியுதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளுக்குள் அதே பாடத்தில் உபரி முதுகலை ஆசிரியர்கள் (with person) இருப்பின் அந்நிர்வாகமே உபரி ஆசிரியரை காலிப் பணியிடத்திற்கு பணிநிரவல் செய்ய வேண்டும். பணி நிரவல் மேற்கொண்டபின் உபரிப் பணியிடத்தை துறைக்கு சரண் செய்யப்பட வேண்டும்.<br>4)அக்கூட்டு மேலாண்மை யின் கீழ் உள்ள அரசு நிதியுதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளுக்குள் உபரி முதுகலை ஆசிரியர்கள் எவரும் இல்லை என்றால் மட்டுமே அப்பணியிடத்திற்கு அக்கூட்டு மேலாண்மையின் கீழ் உள்ள பள்ளிகளில் ஊட்டுப் பதவிகளில் TAMIL NADU PRIVATE SCHOOLS (REGULATION)RULES, 2023, rule 28(4)(b)-ன்படி முதுகலை ஆசிரியர் பதவிக்கான கல்வித்தகுதி பெற்றவர்கள் இருப்பின் முதற்கண் அவர்களுக்கு பதவி உயர்வு அளிக்கப்பட வேண்டும்.<br>5) மேற்காண் வ.எண்.2,3, 4 ன்படி தகுதி பெற்றவர்கள் இல்லை எனில் நேரடி நியமனத்திற்கு ஒப்புதல் அளிக்கலாம் | |

அரசாணை (நிலை) எண்.*165*, பள்ளிக்கல்வி (தொ.க.2(1)த்துறை, நாள் 17.09.2019 வெளியிடப்பட்டதற்கு முன்பு பணியாளர் நிர்ணயத்தின்படி அனுமதிக்கப்பட்ட பணியிடத்திற்கு நியமனம் செய்யப்பட்டு தற்போதைய பணியாளர் நிர்ணயத்தின்படி அப்பணியிடம் உபரி எனில் அப்பணியிடத்திற்கு நியமன ஒப்புதல் வழங்கி கூட்டு

மேலாண்மைப் பள்ளியாக இருப்பின் அக்கூட்டுமேலாண்மைப் பள்ளிகளுக்குள் பணி நிரவல் செய்யப்பட வேண்டும். Single management பள்ளியாக இருப்பின், நியமன ஒப்புதல் வழங்கி அரசுப் பள்ளிக்கு மாற்றுப்பணி மூலம் நியமிக்கப்பட வேண்டும்.

அரசாணை (நிலை) எண்.*165,* பள்ளிக்கல்வி (தொ.க.2(1)த்துறை, நாள் 17.09.2019 வெளியிடப்பட்டதற்கு பிறகு நியமனம் செய்யப்பட்டு இருப்பின் தற்போதைய பணியாளர் நிர்ணயத்தின்படி தகுதி வாய்ந்த பணியிடமாக இருந்தால் மட்டுமே நியமன ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

கூட்டு மேலாண்மைப் பள்ளிகளைப் பொறுத்தவரை, அக்கூட்டு மேலாண்மை நிர்வாகத்தின் கீழ் ஏதேனும் ஒரு பள்ளியில் காலிப் பணியிடம் ஏற்படும்போது, அதே நிர்வாகத்தின் கீழ் பிற மாவட்டங்களில் உள்ள பள்ளிகளில் உபரி ஏதும் இல்லை என்று சார்ந்த முதன்மைக்கல்வி அலுவலர்களிமிருந்து சான்று பெற்ற பின்னரே மேற்காணுமாறு 2(ஆ)ன்படி பூர்த்தி செய்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

தலைமை ஆசிரியர்கள் மற்றும் முதுகலை ஆசிரியர்கள் பணியிடங்கள் தவிர இதர பணியிடங்கள் நியமன ஒப்புதல் வழங்குவது சார்ந்து அறிவுரைகள் தனியே வழங்கப்படும் என்று தெரிவிக்கலாகிறது.

மேற்காண் வழிமுறைகளைப் பின்பற்றி எவ்வித புகாருக்கும் இடமளிக்காமல் இப்பணிகளில் தனி கவனம் செலுத்தி அனைத்து வகை தலைமை ஆசிரியர்கள் மற்றும் முதுகலை ஆசிரியர்களுக்கு நியமன ஒப்புதல் வழங்கிட தக்க நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தொடக்கக் கல்வி) கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

29.3.23

தொடக்கக் கல்வி இயக்குநர் — ஆணையர், பள்ளிக்கல்வி

29/3/23

பெறுநர்

அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்கள்

அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தொடக்கக் கல்வி)

நகல்

அரசு முதன்மைச் செயலாளர், பள்ளிக்கல்வித்துறை, தலைமைச் செயலகம், சென்னை-9 தகவலுக்காக அனுப்பப்படுகிறது.